குலசேகரம்

# சாரதா கிருஷ்ணா ஹோமியோபதி மருத்துவ கல்லூரி ஆண்டு விழா



▶ குலசேகரம் சாரதா கிருஷ்ணா ஹோமியோபதி மருத்துவ கல்லூரி ஆண்டு விழாவை அமைச்சர் மனோ தங்கராஜ் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

குலசேகரம், மே 13: குலசேகரம் சாரதா கிருஷ்ணா ஹோமியோபதி மருத்துவ கல்லூரி ஆண்டு விழா நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி தலைவர் டாக்டர் சி.கே. மோகன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் டாக்டர் என்.வி. சுகதன் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். மாவட்ட அரசு சித்தா மருத்துவ அலுவலர் ராபர்ட் சிங் கவுரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

கல்லூரி ஒழுங்கு குழு தலைவர் கிருஷ்ண பிரசாத், ஐ.எச்.எம்.ஏ. தலைவர் ஷாஜி குட்டி, ஐ.எச்.கே. செயலாளர் கொச்சுராணி வர்க்கீஸ், பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை துணை மருத்துவ அலுவலர் ருக்குமணி தேவி, முன்னாள் மாணவர் சங்க தலைவர் எபி மோசஸ் உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர்.

முன்னதாக கல்லூரி முதுநிலை ஒருங்கிணைப்பாளர் வின்ஸ்டன் வர்க்கீஸ் வரவேற்றார். கல்லூரி பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் அஜெயன் நன்றி கூறினார். நிகழ்ச்சியில், கல்லூரி அறக்கட்டளை நிர்வாகிகள் சந்திரலேகா மோகன், எம்.சி. பவ்யா, மத்திய அரசின் ஓமியோபதி துறை முன்னாள் ஆலோசகர் ரவி எம். நாயர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்து அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள், கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவ- மாணவியருக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

'ஒரு நாட்டின் வளர்ச்சியின் குறியீடுகள் கல்வி, மருத்துவமும் ஆகும். இதில் குறிப்பாக ஒரு நாட்டின் ஆரோக்கியம் என்பது அங்கு வாழும் மக்களின் ஆரோக்கியம் ஆகும். இந்தியாவின் பாரம்பரிய மருத்துவங்கள் புகழ் பெற்றவை. குறிப்பாக மாற்று மருத்துவ முறைகளில் ஒன்றான ஓமியோபதி மருத்துவம் தற்போது இந்தியாவில் நூற்றுக்கணக்கான கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படுகிறது. மேலும் வேகமாக வளர்ந்து வரும் மருத்துவமுறையாகவும் உள்ளது. என்னுடைய அனுபவத்தில் ஓமியோபதி மருத்துவம் நோய்களுக்கு நல்ல தீர்வளிக்கும் மருத்துவமாக உள்ளது.

பாரம்பரிய உணவு வகைகளை நாம் மறந்துவிட்டோம். குறிப்பாக குமரி மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு போன்றவற்றை நாம் மறந்து வருகிறோம். மருத்துவப் படிப்பு என்பது ஒரு அர்ப்பணிப்பான பணியைத் தரும் படிப்பு என்ற எண்ணம் மாணவர்களுக்கு எப்போதும் இருக்க வேண்டும். மட்டுமன்றி மருத்துவர்களுக்கு பணியின் மீது மிகுந்த ஆர்வமும், இரக்க உணர்வும் எப்போதும் இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.